بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْم نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 7

இதழ் 23

# பதர்

வார இதழ் - காதியான்

# Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

துல்கஅதா 8 - ஹிஜ்ரி கமரி 1443★ இஹ்ஸான் 9 ஹிஜ்ரி ஷம்ஸி 1441 ★ 09 ஜூன் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَاَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ
وَاحْذَرُوْا ۚ فَاِنْ تَوَلَّيْتُمْ فَاعْلَمُوْٓا اَنَّمَا عَلٰى
رَسُوْلِنَا الْبَلٰغُ الْمُبِيْنُ

**பொருள் :**
நீங்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள். மேலும் இந்தத் தூதருக்கும் கட்டுப்படுங்கள். விழிப்பாக இருங்கள், நீங்கள் புறக்கணித்துவிட்டால், தூதைத் தெளிவாக எடுத்துரைப்பதே நம் தூதரின் கடமை என்பதனைத் தெரிந்து கொள்ளுங்கள்.
(அல்மாயிதா:93)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**மனித பலவீனத்திற்கு அளவேயில்லை.**
**இறைவனின் அருளும் உதவியுமின்றி அவனால் ஒரு அடி கூட எடுத்து வைக்கமுடியாது.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து

### இறைவனிடம் மாய்த்துக் கொண்ட நபரின் அந்தஸ்து.

இறைவனின் அருளும் உதவியுமின்றி மனிதனால் எதையும் செய்ய முடியாது. அல்லாஹ்வின் பக்கம் மனிதன் ஈர்க்கப்படும்போதும், இறைவனிடத்தில் மனிதன் ஃபனா ஆகிவிடும் போதும் (தன்னை மாய்த்துக் கொள்ளும் போதும்) அவனிடம் இறைப் பணிகள் என்றழைக்கப்படும் பணிகள் வெளிப்படுகின்றன. அவனிடம் உயர்விலும் உயர்வான ஒளிகள் வெளிப்படத் தொடங்குகின்றன. மனித பலவீனத்திற்கு எல்லையே இல்லை. இறைவனின் அருளும் உதவியுமின்றி அவனால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. நான் இதில் எந்த அளவு நம்பிக்கை கொண்டுள்ளேன் என்றால் இறைவன் புறமிருந்து அவனுக்கு உதவி கிடைக்கவில்லையென்றால் அவன் இயற்கை கடன்களை முடித்த பிறகு தனது ஆடையை கட்டுவதற்கு கூட அவனால் ஆற்றல் பெற்றிருக்க முடியாது. ஒருமுறை தும்மும் போதே கூட மனிதன் மரணித்துவிடக் கூடும் என ஒரு நோயைப் பற்றி மருத்துவர்கள் எழுதியுள்ளனர். நன்றாக நினைவிற் கொள்ளுங்கள், மனிதன் பலவீனங்களின் தொகுப்பு ஆவான். எனவேதான் அல்லாஹ் خُلِقَ الْاِنْسَانُ ضَعِيْفًا என்று கூறுகின்றான். (அந்நிஸா:29) மனிதனுக்கு சொந்தமானதென்று எதுவும் கிடையாது. அவனுக்கு எவ்வளவு நோய்கள் வருகின்றனவோ தலை முதல் கால் வரை அத்தனை உடல் உறுப்புகள் இல்லை. இந்த அளவிற்கு அவன் பலவீனங்களின் இரையாகவும், தொகுப்பாகவும் இருக்கும்போது இறைவனுடன் அவனது விவகாரத்தை சரியாக வைப்பதும், தூய அடியாராக ஆகிவிடுவதும் தான் மனிதனின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான ஒரே வழியாகும். அதற்கு அவன் உண்மையை மேற்கொள்வது அவசியமாகும். எவர்கள் உண்மையை கைவிட்டுவிட்டு நம்பிக்கை துரோகம் செய்து குற்றங்களின் அடைக்கலத்தில் கொண்டு செல்லும் பொய்யில் திருப்தி கொள்கின்றனரோ அவர்கள் பெரும் தவறிழைக்கின்றனர். பொய்யை மேற்கொள்வதால் மனித உள்ளம் இருளடைந்துவிடுகின்றது. (பொய் பேசுவதால்) தற்காலிகமாக ஏதாவது ஒரு பயன்கிடைத்துவிடும் என மனிதன் புரிந்து கொள்ளக்கூடும். ஆனால் உண்மையில் பொய்யை மேற்கொள்வதால் மனித உள்ளம்

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...

**மனிதனின் வாழ்க்கை இந்த உலகத்துடனேயே முடிவடைந்துவிடுகின்றது என்றால் மனிதன் இதில் பிறக்க வேண்டும் சிறிது காலம் உண்ணவேண்டும் பின்னர் மரணித்துவிடவேண்டும் என்பதற்காக மட்டுமா அல்லாஹ் இவ்வளவு பெரிய உலகத்தை படைத்துள்ளான். இந்த எண்ணம் முற்றிலும் அறிவிற்கெதிரானதாகும்.**

وَمَا خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ
وَمَا بَيْنَهُمَآ اِلَّا بِالْحَقِّ ؕ وَاِنَّ السَّاعَةَ لَاٰتِيَةٌ
فَاصْفَحِ الصَّفْحَ الْجَمِيْلَ (அல்ஹிஜ்ர்:86)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள் :

அதாவது வானம் மற்றும் பூமியின் படைப்பை சீர்தூக்கிப் பாருங்கள். அது நோக்கமற்றதாக தென்படுகிறதா? இவ்வளவு பெரிய அமைப்பு என்ன நோக்கத்தை கொண்டுள்ளது என்பதை அதன் இயக்கத்தின் மீது பார்வையை செலுத்துகின்ற ஒவ்வொரு அறிவுடைய மனிதராலும் புரிந்து கொள்ள முடியும். மேலும் ساعة (கியாமத்) நிச்சயமாக வரவிருக்கின்றது என்ற முடிவுக்கும் வரமுடியும். சாஅத் என்ற சொல் கியாமத்திற்காகவும் பயன்படுகிறது.

மேலும் நபிமார்களின் எதிரிகளின் அழிவிற்கும் நபிமார்களை ஏற்றுக் கொண்டவர்களின் வெற்றிக்கு நிர்ணயிக்கப்பட்ட வாக்களிக்கப்பட்ட அந்த நேரத்திற்கும் பயன்படுகிறது. வசனத்தின் முதல் பகுதி (அந்த) இரண்டு நேரத்திற்கும் சான்றாக அமைந்துள்ளது. வானம் மற்றும் பூமியின் படைப்பு கியாமத்திற்கான சான்றாகவும் நபிமார்களின் வெற்றிக்கும், அவர்களின் எதிரிகளின் அழிவிற்குமான சான்றாகவும் உள்ளது.

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...

## நபிமொழி

### யாசிப்பதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு அறிவுரை.

1480 : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

உங்களில் ஒருவர் தனது கயிற்றை எடுத்துக் கொண்டு காலைப் பொழுதில் மலையின் பக்கம் சென்று(மலையேறி) விறகுகளை ஒன்று கூட்டி அவற்றை விற்று தாமும் உண்டு தருமமும் செய்யட்டும். அது மக்களிடம் யாசிப்பதை விட அவருக்கு சிறந்ததாகும்.

### தாம் தருமம் செய்த பொருளை விலைக்கு வாங்குவதற்கு தடை.

1489 : ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் பின் கதாப் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் வழியில் ஒரு குதிரையை தருமமாக கொடுத்தார்கள். பின்னர் அது விற்கப்படுவதை அன்னார் (ரலி) கண்டார்கள். மேலும் அதனை விலைக்கு வாங்க விரும்பினார்கள்.

அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று அதற்கு அனுமதி வேண்டினார்கள். அப்போது உங்களின் தருமத்தை திரும்ப பெறாதீர்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி-தொகுதி 3 பாடம் ஸகாத் காதியான் பதிப்பு 2008)

## இந்த இதழில்


📖 திருக்குர்ஆன்
📖 நபிமொழி
📖 மல்ஃபூஸாத்
📖 தஃப்ஸீரே கபீர்
📖 குத்பா பேருரை
ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை (06 மே 2022)
📖 ஹுஸூர் அவர்களின் ஜெர்மனி சுற்றுப்பயணம் - 2013



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

முதல் கிலாஃபத்தில் கிளர்ச்சியாளர்களான முர்தத்களுக்கு எதிராக நடைபெற்ற போர்களில் ஒருசிலவற்றின் விரிவான குறிப்புகள்

சியால்கோட்டைச் சார்ந்த ரஃபீக் அஹ்மது பட் சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய சாபிரா பேகம் சாஹிபா மற்றும் கனடாவைச் சார்ந்த ரஷீது அஹ்மது பாஜுவா சாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய சுரைய்யா சாஹிபாவின் நற்குறிப்புகளும், ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 மே 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு இஹ்ஸான் மாதம் **09ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படைப்பிரிவுகளை அனுப்பியது தொடர்பாக கடந்த குத்பாக்களில் கூறப்பட்டிருந்தது. அவற்றின் சில விளக்கங்களை நான் எடுத்துரைக்கின்றேன். அதன் மூலம் அந்த நேரத்தில் நிலவிய நிலைமையின் தீவிரத்தை அனுமானித்து கொள்ள முடியும். ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டது போன்று 11 படைப்பிரிவுகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் முதல் படைப்பிரிவின் விளக்கம் இவ்வாறாகும். துலைஹா பின் குவைலத், மாலிக் பின் நுவைரா, ஸஜாஹ் பின்த் ஹாரிஸ் மற்றும் முஸைலமா கஸ்ஸாப் போன்ற முர்தத்களான கிளர்ச்சியாளர்களையும் பொய் நபித்துவ வாதிகளையும் அழிப்பதற்காக முதல் படைப்பிரிவு அனுப்பப்பட்டது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் ஒரு கொடியை ஒப்படைத்து துலைஹா பின் குவைலைதிற்கு எதிராக போரிட செல்லுமாறும் அதனை முடித்துவிட்டு பதாஹ்வில் மாலிக் பின் நுவைராவுடன் போரிடுமாறும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு கட்டளை வழங்கினார்கள். மேலும் ஒருவேளை அவன் போர் செய்வதற்கு பிடிவாதம் பிடித்தால், சண்டையிட நேரிட்டால் பின்னர் அவனுடன் போர் புரியும்படியும் அன்னார் (ரலி) கட்டளையிட்டார்கள். பதாஹ் என்பது பனுஅஸத் கோத்திரத்தின் ஒரு நீரூற்றின் பெயராகும்.

(தாரீகே தபரி தொகுதி 2 பக்கம் 260 தாருல் குதுபில் இல்மிய்யா பதிப்பு லெப்னான் 2012)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸர் (ரலி) அவர்களை அன்சார் சகோதரர்களுக்கு அமீராக நியமித்தார்கள். மேலும் அன்னாரை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு கீழ் நியமித்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கட்டளை வழங்கினார்கள். அதாவது பனூஅஸதின் ஒரு நீரூற்றான பஸாகாவில் முகாமிட்டிருந்த துலைஹா மற்றும் உயைய்னா பின் ஹிஸன் ஆகியோருக்கு எதிராக போரிட செல்லுமாறு கட்டளை வழங்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களுடன் போரிடுவதற்காக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்காக கொடி ஒன்றை கட்டினார்கள். அப்போது கூறினார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மிகச் சிறந்த அடியார் ஆவார். அவர் நமது சகோதரர் ஆவார். அவர் அல்லாஹ்வின் வாள்களில் ஒரு வாள் ஆவார். அந்த வாளை நிராகரிப்பாளர்கள் மற்றும் நயவஞ்சகர்களுக்கு எதிராக அல்லாஹ் அன்னாரிடம் ஒப்படைத்துள்ளான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியேற்றுள்ளேன்.

(அல்ஹிதாயா வன்னஹாயா தொகுதி 3 பக்கம் 313 தாருல் குதுபில் இல்மிய்யா பதிப்பு லெப்னான் 2012)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை துலைஹா மற்றும் உயைய்னா ஆகியோருக்கு எதிராக அனுப்பினார்கள். அந்த இரண்டு எதிரிகளின் சுருக்கமான அறிமுகம் தரப்படுகின்றது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்வின் இறுதி நாட்களில் வெளிப்பட்ட பொய் நபித்துவ வாதிகளில் துலைஹா அஸதியும் ஒருவனாக இருந்தான். அவனது பெயர் துலைஹா பின் குவைலத் பின் நவ்ஃபல் பின் நழ்லா அஸதி ஆகும். ஆமுல் வஃபூத் எனும் குழுக்களின் வருகை நிகழ்ந்த ஆண்டில் அவன் தனது பனூ அஸத் கோத்திரத்துடன் ஹிஜ்ரி 9ஆம் ஆண்டில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தான். மேலும் மதீனாவிற்கு வந்து அந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினர். மேலும் நாங்கள் உங்களிடம் வந்திருக்கின்றோம். மேலும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை. தாங்கள் அல்லாஹ்வின் அடியார் மற்றும் அவனுடைய தூதர் என்றும் நாங்கள் சாட்சி கூறுகின்றோம் என்று நன்மை செய்தது போன்று அவர்கள் கூறினர். பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நோக்கி தாங்கள் எங்களிடம் எவரையும் அனுப்பவில்லை. நாங்கள் எங்களுக்கு பின்னால் இருப்பவர்களுக்கு போதுமானவர்கள் ஆவோம் என்றும் கூறினர். அந்த மக்கள் திரும்பிச் சென்றுவிட்டபோது ஹஸ்ரத் நபி(ஸல்)அவர்களின் வாழ்க்கையிலேயே துலைஹா மார்க்கப் புறக்கணிப்பை மேற்கொண்டான். மேலும் நபித்துவ வாதம் செய்துவிட்டான். மேலும் சுமைரா என்ற இடத்தை தனது படையின் தலைமையிடமாக ஆக்கிக் கொண்டான். ஆது சமுதாயத்தின் சுமைரா என்ற ஒருவரின் பெயர் அந்த இடத்திற்கு வைக்கப்பட்டது. மதீனாவிலிருந்து மக்காவிற்கு செல்லும் வழியில் ஒரு மன்ஸில் தொலைவில் அந்த இடம் அமைந்துள்ளது. அந்த பகுதியைச் சுற்றிலும் கருமை நிற மலைகள் உள்ளன. அதன் காரணமாக இந்தப் பெயர் சூட்டப்பட்டது. எவ்வாறிருப்பினும் அவன் செய்த வாதத்தால் பொதுமக்கள் அவனது சீடர்களாகிவிட்டனர். மக்கள் வழிகெடுவதற்கு முதல் காரணி இதுவாக

இருந்தது. அதாவது அவன் தனது சமுதாயத்துடன் ஒரு பயணத்தில் இருந்தான். அப்போது தண்ணீர் தீர்ந்துபோனது. மக்களுக்கு கடுமையான தாகம் ஏற்பட்டது.

அப்போது நீங்கள் இஃலால் என்ற எனது குதிரையின் மீது சவாரி செய்து சில மைல் தூரம் செல்லுங்கள். அங்கு உங்களுக்கு தண்ணீர் கிடைக்கும் என்று அவன் கூறினான். அவர்கள் அவ்வாறே செய்தனர். அவர்களுக்கு தண்ணீர் கிடைத்துவிட்டது. அதன் காரணமாக அந்த கிராமப்புற வாசிகள் அவனது குழப்பத்திற்கு இரையாகிவிட்டனர். தண்ணீருக்கான இடத்தை அவன் முன்பே பார்த்திருந்தான். மிக புத்திசாலித்தனமாக அவன் அவர்களை அங்கு அனுப்பினான். பின்னர் அதன் காரணமாக படிப்பறிவில்லாத மக்கள் அவனது குழுப்பத்திற்கு இரையாகினர். எவ்வாறிருப்பினும் அவன் தொழுகையிலிருந்து ஸஜ்தாக்களை அகற்றியிருந்ததும் அவனது பொருளற்ற விஷயங்களில் ஒன்றாக இருந்தது. அதாவது தொழுகைகளில் ஸஜ்தாக்களுக்கு அவசியம் இல்லை என்று கூறினான். விண்ணிலிருந்து தனக்கு வஹீ வருகின்றது என்பது அவனது வாதமாக இருந்தது. சில பொருளற்ற வாக்கியங்களை வஹீயாக அவன் முன் வைத்து வந்தான்.

வரலாற்றிலிருந்து தெரிய வருகின்றது. அறியாமை காலத்தில் பாதிரியார்கள் அதுபோன்ற வாக்கியங்களை மக்களுக்கு முன்னால் வைத்து அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தனர். துலைஹாவும் பாதிரியாக இருந்தான். துலைஹா அஸதியின் மனம் அவனை ஏமாற்றத்தில் ஆழ்த்தியது. அவனது விவகாரம் தீவிரம் அடைந்தது. அவனது வலிமை அதிகரித்தது. ஹஸ்ரத் நபி(ஸல்)அவர்களுக்கு அவனது விவகாரத்தைப் பற்றிய தகவல் கிடைத்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் ஸிரார் பின் அஸ்வர் அஸதியை அவனுடன் போர் புரிவதற்காக அனுப்பி வைத்தார்கள்.

ஆயினும் அந்த விஷயம் ஸிராரின் ஆற்றலுக்குட்பட்டதாக இருக்கவில்லை. ஏனென்றால் காலம் செல்ல செல்ல அவனது வலிமை அதிகரித்திருந்தது. குறிப்பாக அஸது மற்றும் கத்ஃபான் என்ற இரண்டு கோத்திரங்களும் அவன் மீது நம்பிக்கை கொண்ட பிறகு அவனது வலிமை மேலும் அதிகரித்துவிட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணமும் நிகழ்ந்திருந்தது. மேலும் துலைஹாவின் விவகாரமும் தீர்க்கப்படவில்லை. கிலாஃபத் பொறுப்புகளை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஏற்றுக் கொண்டபோது கிளர்ச்சியாளர்களை அழிப்பதற்காக படையை தயார் செய்தார்கள். மேலும் படைத்தலைவர்களை நியமனம் செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் தலைமையில் துலைஹா அஸதிக்கெதிராக படையை அனுப்பி வைத்தார்கள்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் மொழியாக்கம் செய்த ஸய்யிதுனா அபூபக்ர் ஸித்தீக்(ரலி)அவர்களின் சாதனைகள் என்ற நூல் பக்கம் 316-318.அல்ஃபுர்கான் அச்சகம் முஸஃப்பர்கட் பாகிஸ்தான்) (அஸதுல்காபா தொகுதி 3 பக்கம் 94 தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2016)

அவர்கள் வெறும் மார்க்கத்தை புறக்கணித்தவர்களாகவோ அல்லது நபித்துவ வாதம் செய்பவர்களாகவோ மட்டும் இருக்கவில்லை. மாறாக அவர்கள் முஸ்லிம்களுடன் போரும் புரிந்து வந்தனர். மேலும் முஸ்லிம்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தவும் முயன்று வந்தனர்.

உயைய்னா பின் ஹிஸன் யாராக இருந்தான்? இது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

அஹ்ஸாப் போரில் பனூ ஃபஸாரா கோத்திரத்தின் தலைவனாக இருந்த அதே நபர்தான் உயைய்னா ஆவான். அந்தப் போரின் போது நிராகரிப்பாளர்களின் மூன்று படைகள் பனூகுரைழாவுடன் இணைந்து கொண்டு மதீனாவின் மீது மிக கடுமையாக தாக்குதல் நடத்த எண்ணம் கொண்டிருந்தன. அந்த மூன்று படைகளில் உயைய்னா ஒரு படைக்கு தலைவனாக இருந்தான். அஹ்ஸாப் போரில் நிராகரிப்பாளர்கள் தோல்வியுற்ற பிறகும் அவன் மதீனாவின் மீது தாக்குதல் நடத்த எண்ணம் கொண்டிருந்தான். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நகரத்திலிருந்து வெளியே சென்று அவனது தாக்குதலை முறியடித்தார்கள். அவனை பின்வாங்குவதற்கு நிர்பந்தபடுத்திவிட்டார்கள். இந்தப் போர் திகரஸ் என்றழைக்கப்படுகிறது.

உயைய்னா பின் ஹிஸன் மக்கா வெற்றிக்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அதில் பங்கு பெற்றார். மக்கா வெற்றியின் போது அவர் முஸ்லிமாக இருந்தார். ஹுனைன் போர் மற்றும் தாயிஃப் போரிலும் பங்குபெற்றிருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டில் பனூதமீமை கட்டுப்படுத்துவதற்காக ஐம்பது சவாரிகளுடன் அவரை அனுப்பினார்கள். அன்சார் அல்லது முஹாஜிர்களில் எவரும் அந்தப் படையில் இருக்கவில்லை. அந்தப் போரின் காரணம் இதுவாக இருந்தது. அதாவது பனூதமீம் கோத்திரத்தினர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அதிகாரிகளை ஸதகாக்களை வசூல் செய்து கொண்டு செல்வதிலிருந்து தடுத்து நிறுத்தியிருந்தனர். பின்னர் அபுபக்ர் ஸித்தீகி (ரலி) அவர்களின் காலத்தில் முர்தத்களுடன் இவரும் மார்க்கப் புறக்கணிப்பு குழப்பங்களுக்கு இரையாகினார். மேலும் துலைஹாவால் ஈர்க்கப்பட்டார். மேலும் அவனிடம் பைஅத் செய்துவிட்டார். எவ்வாறிப்பினும் பிற்காலத்தில் அவர் இஸ்லாத்தின் பக்கம் திரும்பி வந்திருந்தார்.

இந்த மக்கள் முன்னரும் இஸ்லாத்திற்கு எதிராக சண்டையிட்டு வந்தனர். பின்னர் முஸ்லிம் ஆயினர். பின்னர் சண்டையிட தொடங்கிவிட்டனர்.

பின்னர் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது அப்ஸ் துப்யான் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் புஸாஹா என்ற இடத்தில் ஒன்று திரண்டபோது துலைஹா தே கோத்திரத்தின் இரண்டு கிளை கோத்திரங்களான பனூஜதீலா மற்றும் கவ்ஸ் கோத்திரங்களிடம், நீங்கள் உடனடியாக என்னிடம் வந்துவிடுங்கள் என்று தூது அனுப்பினான். அக்கோத்திரத்தின் சில மக்கள் உடனடியாக துலைஹாவிடம் வந்துவிட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை துல் கஸ்ஸாவிற்கு அனுப்பி வைப்பதற்கு முன், நீங்கள் உங்களது சமுதாயத்திடம் அதாவது தே கோத்திரத்திடம் செல்லுங்கள். அவர்கள் அழிந்துவிடக் கூடாது. போர் புரிந்து அழிந்துவிடக் கூடாது என்று ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் தமது சமுதாயத்திடம் சென்றார்கள். மேலும் ஸர்வஹ் மற்றும் காரிப் என்ற இடத்தில் அவர்களை தடுத்து நிறுத்திவிட்டார்கள். மேலும் அவர்களுக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு கொடுத்து அவர்களை எச்சரித்தார்கள். ஸர்வஹ் என்பதும் கத்ஃபான் பகுதியில் அமைந்துள்ள ஒரு இடத்தின் பெயராகும். அது பனூமுர்ராவில் அமைந்துள்ள பின் அஃபின் நீரூற்று என்றும் கூறப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் அன்னாருக்குப் பின்னாலேயே ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள். முதலில் அன்னார் தே கோத்திரத்தின் திசைகளிலிருந்து திட்டத்தை துவங்கவேண்டும் பின்னர் புஸாஹாவின் பக்கம் செல்ல வேண்டும் பின்னர் கடைசியில் புதாஹ் என்ற இடத்திற்கு செல்ல வேண்டும் என்று அன்னாருக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். மேலும் எதிரிகளின் கதையை முடித்த பிறகு புதிய கட்டளைகள் கிடைக்காத வரை வேறு எந்த இடத்தின் மீதும் தாக்குதல் நடத்த எண்ணம் கொள்ளவேண்டாம் என்றும் கட்டளையிட்டிருந்தார்கள்.

தாம் சுயமே கைபரை நோக்கி சென்று கொண்டிருப்பதாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் இவ்வாறு வெளிப்படுத்தினார்கள். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சுயமே கைபரை நோக்கி புறப்படுகின்றார்கள் பின்னர் அங்கிருந்து திரும்பி சல்மா மலைகளின் பக்கம் வந்து காலித் அவர்களுடன் இணைந்து கொள்வார்கள் என்ற செய்தி மக்களிடம் பிரபலமாகியிருந்தது.

மற்றோர் அறிவிப்பிலிருந்து தெரிய வருகிறது.அதாவது மற்றொரு படையும் உள்ளது என்ற செய்தி எதிரிகளுக்கு கிடைத்து அவர்கள் அச்சத்திற்குள்ளாகிவிட வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி)அவர்கள் இந்த திட்டத்தை தீட்டியிருந்தார்கள். ஆனால் உள்ளபடியே அன்னார் (ரலி) அவர்கள் முழுப்படையையும் ஹஸ்ரத் காலித் பின் வலீத்(ரலி)அவர்களுடன் அனுப்பி வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும் புறப்பட்டார்கள். அன்னார் புஸாஹாவிலிருந்து திரும்பி அஜாஃ என்ற இடத்திற்கு சென்றார்கள். அஜாஃ மற்றும் சல்மா என்பது அவை இரண்டு மலைகள் ஆகும். சல்மா மலை சுமைராவிற்கு இடது பக்கம் இருக்கிறது என்று ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது. ஒரு கூற்றின் அடிப்படையில் அஜாஃ என்பது தே பகுதியின் ஒரு மலையாகும்.

எவ்வாறிருப்பினும் தான் கைபரை நோக்கி செல்வதாகவும் பின்னர் அங்கிருந்து தே கோத்திரத்தை எதிர்கொள்ள திரும்புவேன் என்பது போன்ற தோற்றத்தை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

இந்த திட்டத்தின் காரணமாக தே கோத்திரத்தின் மக்கள் தங்கள் இடத்திலேயே அமர்ந்திருந்தார்கள். துலைஹாவிடம் செல்வதிலிருந்து விலகிக் கொண்டார்கள். ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்களும் தே பகுதியை சென்றடைந்தார்கள். அவர்களுக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு கொடுத்தார்கள். அபூஃபஸீலிற்கு ஒருபோதும் கட்டுப்பட மாட்டோம் என்று அவர்கள் கூறினர். இங்கு அபூஃபஸீல் என்பதன் பொருள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள். தனது தாயிடமிருந்து பிரிந்துவிட்ட அல்லது பால் குடி மறக்கடிக்கப்பட்ட ஒட்டகக் குட்டி அல்லது கன்றுக் குட்டியை ஃபஸீல் என்று கூறுவார்கள். பக்ர் மற்றும் ஃபஸீல் என்ற இரண்டு சொற்களின் பொருளும் ஒட்டகத்தின் குட்டிகள் என்பதாகும்.

எனவே சில மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் அபூஃபஸீல் அதாவது ஒட்டகக் குட்டிகளின் தந்தை என்று அழைத்து வந்தனர். ஹஸ்ரத் அதீ(ரலி) அவர்கள் கூறினார்கள்; உங்களை நோக்கி எப்படிபட்ட ஒரு படை முன்னேறி வருகிறதென்றால் அது உங்கள் மீது ஒருபோதும் கருணை காட்டாது. மேலும் கொலை மற்றும் கொள்ளைக்கான வியாபாரம் எந்த அளவுக்கு சூடுபிடிக்கும் என்றால் எந்த நபருக்கும் அடைக்கலம் கிடைக்காது. நான் உங்களுக்கு புரிய வைத்துவிட்டேன். இனி நீங்களாச்சு உங்க வேலையாச்சு.

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப அன்னார் (ரலி) தமது கோத்திரத்து மக்களிடம் இவ்வாறும் கூறினார்கள். அதாவது தற்போது நீங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஃபஹ்லுல் அக்பர் என்ற பட்டப் பெயரால் அழைத்தால் பின்னர் நீங்கள் அன்னாரை வலிமை வாய்ந்த ஆண் ஒட்டகம் என்று அழைக்கும் நிர்பந்தத்திற்கு ஆளாகிவிடுவீர்கள்.

ஃபஹ்ல் என்பது எல்லா ஆண் விலங்குகளுக்கும் கூறப்படும். அதாவது நீங்கள் எள்ளி நகையாடும் வகையில் அன்னாரை ஒட்டகத்தின் சிறிய குட்டி என்று கூறுகின்றீர்கள். ஆனால் நீங்கள் அன்னாரை வலிமை வாய்ந்த ஆண் ஒட்டகம் என்று அழைக்கும் நிர்பந்தத்திற்கு ஆளாகிவிடுவீர்கள். தே கோத்திரத்தின் மக்கள் அன்னாரது கூற்றை கேட்டுவிட்டு இவ்வாறு கூறினர். சரி அப்படியென்றால் தாக்குதல் நடத்த இருக்கும் அந்த படையுடன் சென்று நீர் இணைந்து கொள்ளும். மேலும் நாங்கள் புஸாஹாவிலுள்ள எங்களது சமுதாயத்தினை திரும்ப அழைத்துக் கொள்ளும் வரை எங்கள் மீது தாக்குதல் தொடுப்பதிலிருந்து அவர்களை தடுத்து நிறுத்தும். ஏனென்றால் எங்களுக்கு அச்சம் உள்ளது. அதாவது நாங்கள் துலைஹாவை எதிர்த்தால் அவனது ஊரில் உள்ள எங்களது மக்கள் அனைவரையும் அவன் கொன்றுவிடுவான். அல்லது அவன் அவர்களை பணைய கைதிகளாக்கிக் கொள்வான். அவன் தான் சிறைபிடித்த தனது எதிரிகளை பின்னர் விடுதலை செய்ததில்லை என்று அவனைக் குறித்து பிரபலமாகியிருந்தது. எனவே நாங்கள் வந்துவிட்டால் அல்லது இவர்கள் முஸ்லிமாகவுள்ளனர் என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டுவிட்டால் அவன் கொன்றுவிடுவான் என்று தே கோத்திரத்து மக்கள் கூறினர்.

ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை சுக் என்ற இடத்தில் வரவேற்றார்கள். மதீனாவின் சுற்றுபுறத்திலுள்ள ஓர் இடத்தின் பெயர் சுக் ஆகும். காலித் (ரலி) அவர்களே! தாங்கள் எனக்கு மூன்று நாட்கள் அவகாசம் கொடுங்கள். தாங்கள் அவர்களை நரக நெருப்பில் நுழையச் செய்வதை விட இந்த விஷயம் சிறந்ததாகும் என்று ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது தே கோத்திரத்து மக்கள் தங்களுடன் வந்துவிடுவார்கள். தாங்கள் அவர்களுடன் சண்டையிடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் தமது சமுதாயத்திடம் வந்தார்கள். அதற்கு முன்பாகவே தே கோத்திரத்தின் மக்கள் புஸாஹாவிலிருந்து தமது கோத்திரத்து மக்களை திரும்ப அழைப்பதற்காக ஆட்களை அனுப்பியிருந்தார்கள். அந்த கோத்திரத்து மக்கள் துலைஹாவின் படையிலிருந்த தம் மக்களுக்கு இந்த தூதுச் செய்தியை அனுப்பியிருந்தார்கள். அதாவது முஸ்லிம்கள் துலைஹா படையின் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக தே கோத்திரத்தின் மீது தாக்குதல் நடத்த எண்ணம் கொண்டுள்ளனர். எனவே நீங்கள் உடனடியாக திரும்பி வாருங்கள். திரும்பி வந்து இந்த தாக்குதலை முறியடியுங்கள் என்று அவர்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினர். இந்த திட்டத்தை அவர்கள் செயல்படுத்தியிருந்தனர். எனவே அவர்கள் தமது சமுதாயத்திடம் படைக் குழுக்களாக திரும்பி வந்தனர். அவ்வாறு நடைபெறாமல் இருந்திருந்தால்

துலைஹாவும் அவனது படையினரும் அவர்களை உயிருடன் விட்டிருக்க மாட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் திரும்பி வந்து தமது கோத்திரத்து மக்களுக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி மீண்டும் அழைப்பு கொடுத்தார்கள்.

ஒரு வரலாற்று நூலாசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார் :

அதீ அவர்களின் ஒரு சிறப்பான பணி என்னவென்றால் அன்னார் தமது கோத்திரத்திற்கு இஸ்லாமிய படையில் இணைவதற்கு அழைப்பு கொடுத்தார்கள்.

பனூ தே கோத்திரத்தின் படை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் படையுடன் இணைந்தது எதிரிகளின் முதல் தோல்வியாக இருந்தது. ஏனென்றால் தே கோத்திரம் அரேபிய தீபகற்பத்தின் வலிமை வாய்ந்த கோத்திரங்களில் ஒரு கோத்திரமாக கணக்கிடப்பட்டு வந்தது. ஏனைய கோத்திரங்கள் அவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கிவந்தனர். அவர்களின் ஆற்றல் மற்றும் வலிமை மீது நம்பிக்கை இருந்தது.அவர்களை கண்டு அச்சம் கொண்டு வந்தனர்.தமது பகுதியில் அவர்களுக்கு கண்ணியமும் மேன்மையும் கிடைத்திருந்தது.அருகில் இருந்த கோத்திரத்தார் அவர்களின் நட்புக் கோத்திரமாக திகழ முயன்று வந்தனர்.

(தாரீகே தபரி தொகுதி 2 பக்கம் 260-வெளியீடு தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூட் 2012)

அடுத்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இங்கிருந்து ஜதீலாவை எதிர்கொள்ளும் எண்ணத்துடன் அன்சர் எனும் பகுதிக்கு புறப்பட்டார்கள். அன்சர் என்பதும் தே கோத்திரத்தின் ஒரு நீரூற்றின் பெயராகும். அங்கு அந்த நீரூற்றின் சுற்றுப்புறத்தில் குடியிருப்புகள் இருந்தன.ஹஸ்ரத் அதீ(ரலி)அவர்கள் அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள். அதாவது தே கோத்திரத்தின் உதாரணம் ஒரு பறவையைப் போன்றதாகும். தே கோத்திரத்தின் இரண்டு கரங்களில் ஒரு கரம் ஜதீலா கோத்திரம் ஆகும். தாங்கள் எனக்கு சில நாட்கள் காலக் கெடு வழங்குங்கள். அல்லாஹ் கவ்ஸ் கோத்திரத்தை அதாவது தே கோத்திரத்தின் இரண்டாவது கிளையை வழிகேட்டிலிருந்து வெளியேற்றியது போன்று ஜதீலா கோத்திரத்தையும் அல்லாஹ் நேர்வழிக்கு கொண்டு வந்துவிடக் கூடும். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு அவ்வாறே செய்தார்கள். ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் ஜதீலா கோத்திரத்திடம் சென்றார்கள். ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் தொடர்ந்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்கள். இறுதியில் அவர்கள் ஹஸ்ரத் அதீ(ரலி) அவர்களிடம் பைஅத் செய்துவிட்டார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தியை ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் வந்து கூறினார்கள். மேலும் அக்கோத்திரத்தினர் ஓராயிரம் சவாரிகளுடன் முஸ்லிம்களிடம் வந்துவிட்டனர்.

(தாரீகே தபரி தொகுதி 2 பக்கம் 260 தாருல் குதுபில் இல்மிய்யா லெபனான் வெளியீடு 2012)

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தே கோத்திரம் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு துலைஹா அஸதியை நோக்கி புறப்பட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் எதிரிகளுக்கு அருகில் சென்றடைந்தபோது அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உக்காஷா பின் முஹ்ஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சாபித் பின் அக்ஸம் (ரலி) அவர்களையும் எதிரிகளைப் பற்றிய செய்தியை அறிந்து வர முன்னால் அனுப்பி வைத்தார்கள்.

இவர்கள் எதிரிகளுக்கு அருகில் சென்றடைந்ததும் துலைஹாவும் அவனது சகோதரன் சல்மாவும் பார்வையிடவும், நிலைமையை அறிந்து கொள்வதற்கும் புறப்பட்டனர். சல்மா ஹஸ்ரத் சாபித் (ரலி) அவர்களுக்கு அவகாசமே கொடுக்கவில்லை. அவர்களை ஷஹீதாக்கிவிட்டான். தனது சகோதரன் அவனது எதிரியை வீழ்த்தி-விட்டதை துலைஹா கண்டபோது அவன் தனது எதிரிக்கெதிராக அதாவது உக்காஷாவிற்கு எதிராக உதவிக்காக அழைத்தான். வா வந்து எனக்கு உதவி செய். இல்லையென்றால் இந்த நபர் என்னை கொன்றுவிடுவான் என்று கூறி உதவிக்கு அழைத்தான். ஆக அவர்கள் இருவரும் இணைந்து உக்காஷா (ரலி) அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அன்னாரையும் ஷஹீதாக்கிவிட்டனர். பின்னர் தமது இடத்திற்கு திரும்பி வந்துவிட்டனர்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது.அதாவது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உக்காஷா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சாபித் அன்சாரரி (ரலி) ஆகியோரை எதிரிகளின் செய்திகளை அறிந்துவர அனுப்பியபோது துலைஹாவின் சகோதரன் ஹிபாலை கண்டனர். அவர்கள் இருவரும் அவனை கொன்றுவிட்டனர். இதில் எந்த அளவு உண்மை உள்ளது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஒருவேளை இந்த அறிவிப்பு சரியானதென்றாலும் அவன் சண்டையிட முற்பட்டான். எனவே சண்டை நிகழ்ந்தது. அப்போது அவன் கொல்லப்பட்டான், ஏனென்றால் அவர்கள் இருவரும் செய்தி அறிந்துவரவே சென்றனர். போர் புரிவதற்காக அவர்கள் ஒருபோதும் செல்லவேயில்லை. இந்த செய்தி துலைஹாவிற்கு கிடைத்தபோது துலைஹாவும் அவனது சகோதரன் சல்மாவும் புறப்பட்டனர். துலைஹா ஹஸ்ரத் உக்காஷாவை ஷஹீதாக்கிவிட்டான். மேலும் அவனது சகோதரன் ஹஸ்ரத் சாபித் (ரலி) அவர்களை ஷஹீதாக்கிவிட்டான். பின்னர் அவர்கள் இருவரும் திரும்பி சென்றுவிட்டனர்.

(தாரீகுத் தபரி தொகுதி 2 பக்கம் 261-262 தாருல் குதுபில் இல்மிய்யா லெப்னான் வெளியீடு 2012)(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 208-209 தாருல் குதுபில் இல்மிய்யா 2003)

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தமது படையுடன் முன்னேறி சென்றார்கள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் சாபித் (ரலி) அவர்கள் கொலையுண்ட நிலையில் வீழ்ந்து கிடந்த அந்த இடத்தை அடைந்தார்கள். ஆயினும் அவர்களில் எவரும் அன்னாரைப் பற்றி அறிந்திருக்கவில்லை. எந்த அளவுக்கென்றால் தீடிரென ஒரு சவாரியின் கால்களுக்கிடையில் அன்னாரின் உடல் வந்துவிட்டது. அதனால் முஸ்லிம்களுக்கு மிகவும் துயரம் ஏற்பட்டது. பின்னர் சற்று ஆழமாக பார்த்தபோது ஹஸ்ரத் உக்காஷா பின் முஹ்ஸன் (ரலி) அவர்களும் ஷஹீதாக்கப்பட்டு கிடப்பது தெரிய வந்தது. அதனால் முஸ்லிம்கள் இன்னும் அதிகமாக வேதனை அடைந்தனர். முஸ்லிம்களின் பெரும் தலைவர்களில் இரு தலைவர்களும், குதிரை சவாரி வீரர்களில் இரு குதிரை சவாரி வீரர்களும் ஷஹீதாகிவிட்டனர் என்று முஸ்லிம்கள் கூறினர். எனவே இந்த நிலைமைகளை கண்ட பிறகு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் படையை ஒழுங்குபடுத்தினார்கள். போர் புரிவதற்காக படையை முறைப்படுத்தினார்கள். மேலும் தே கோத்திரத்தை நோக்கி திரும்பினார்கள். ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அதீ பின் ஹாதிம் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தாங்கள் எனது இடத்திற்கு வந்து சில நாட்கள் தங்குங்கள். நான் தே சமுதாயத்தின்

அனைத்து கோத்திரங்களிடமும் நபர்களை அனுப்புகிறேன். தற்போது தங்களுடன் எந்த அளவிற்கு முஸ்லிம்கள் உள்ளனரோ அவர்களை விட அதிகமான படையை தங்களுக்காக ஒன்று கூட்டி தருகிறேன். பின்னர் நான் சுயமே தங்களுடைய எதிரிகளுக்கெதிராக தங்களுடன் செல்வேன். எனவே தாங்கள் என்னிடம் வந்துவிடுங்கள் அதாவது இந்தப் பக்கம் வாருங்கள் என்று ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு தகவல் கூறி அனுப்பினார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது .ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஸல்மா எனும் ஊரில் உர்க் எனும் இடத்தில் தங்கியிருந்தார்கள். ஆனால் மற்றோர் அறிவிப்பிற்கேற்ப அன்னார் (ரலி) அவர்கள் அஜா எனும் இடத்தில் தங்கியிருந்தார்கள். அங்கிருந்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் துலைஹாவிற்கெதிராக தமது படையை ஒழுங்குபடுத்தினார்கள். மேலும் புஸாஹா எனும் இடத்தில் இருவருக்கும் சண்டை நிகழ்ந்தது. மக்கள் போரை துவங்கிய போது உயைனா பனூ ஃபஸாராஹ்வின் எழுநூறு நபர்களுடன் இணைந்து துலைஹாவின் தோழமையில் கடும் சண்டையிட்டனர்.

உயைய்னா மற்றும் துலைஹா ஒன்று சேர்ந்து கொண்டனர். அவர்கள் முஸ்லிம்களுக்கெதிராக போரிட்டனர். துலைஹா உவ்னி கூடாரத்தின் வளாகத்தில் போர்வையை போர்த்திக் கொண்டு அமர்ந்திருந்தான். அவன் தன்னை நபியாக ஆக்கிக் கொண்டிருந்தான். எனவே அவன் கூடாரத்தில் அமர்ந்து கொண்டு மறைவான செய்திகளை கொடுத்துக் கொண்டிருந்தான்.

மக்கள் போரில் மும்முரமாக இருந்த போது நீங்கள் போர் புரியுங்கள். என்ன முடிவு வெளிப்பட உள்ளது? என்பதை நான் இங்கிருந்து உங்களுக்கு கூறுகிறேன் என்று அவன் கூறிக் கொண்டிருந்தான். உயைய்னாவிற்கு போரில் துன்பத்தை எதிர்கொள்ள நேரிட்டபோதும் அவனுக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டபோதும் அவன் துலைஹாவிடம் சென்று இதுவரை ஜிப்ராயீல் உம்மிடம் வரவில்லையா? போரில் அடி விழுந்து கொண்டிருக்கிறது. எனக்கு இல்ஹாம் வருகின்றது. வஹீ வருகின்றது. என்ன நடக்கும்? என்பதை எனக்கு ஜிப்ராயீல் கூறுவார் என்றெல்லாம் கூறக்கூடிய நீ கூறு. இதுவரை முடிவு எதுவும் வெளிப்படவில்லையா? ஜிப்ராயீல் வரவில்லையா? என்று கேட்டான். இல்லை என்று அவன் கூறினான். அதற்கு முடிந்துவிட்டது என்று கூறிவிட்டு போரில் மும்முரமாகிவிட்டான். அவனை மீண்டும் போரின் கடுமை துன்பத்திற்குள்ளாக்கியபோது அவன் மீண்டும் துலைஹாவிடம் வந்து உனக்கு மோசம் உண்டாகட்டும். இதுவரை ஜிப்ராயீல் உன்னிடம் வரவில்லையா? என்று கேட்டான்.அதற்கு அல்லாஹ்வின் மீது ஆணையாக வரவில்லை என்று கூறினான். அதற்கு எப்போது வருவார்கள் என்று ஆணையிட்டவாறு கேட்டான்.நமது கதை முடிய இருக்கிறது என்று கூறினான். பின்னர் அவன் போர் மைதானத்திற்கு திரும்பிச் சென்று சண்டையிடத் துவங்கினான். தற்போது அவனுக்கு மீண்டும் தோல்வி ஏற்பட்டபோது அவன் மீண்டும் துலைஹாவிடம் வந்து இன்னும் உம்மிடம் ஜிப்ராயீல் வரவில்லையா? என்று கேட்டான். அதற்கு ஆம். வந்தார் என்று துலைஹா கூறினான். அதற்கு ஜிப்ராயீல் என்ன கூறினார்? என்று கேட்டான். அவர்களது ஆலையைப் போன்று உங்கள் ஆலையும் இருக்கும். அதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெறும். உனது கூற்று எவ்வாறு உயர்வு பெறும் என்றால் உன்னால் அதை மறக்க முடியாது என்று ஜிப்ராயீல் தம்மிடம் கூறியதாக துலைஹா கூறினான்.

இதைக் கேட்டபோது, அல்லாஹ் அறிவான். அண்மையில் அதுபோன்ற சம்பவங்கள் நடைபெறும். அவற்றை உன்னால் மாற்றவும் முடியாது அல்லது மறக்கவும் முடியாது என்று உயைய்னா தனது மனதில் கூறினார். பின்னர் அவர் தனது சமுதாயத்திடம் வந்தார். மேலும் அந்த சமுதாயத்திடம் இவ்வாறு கூறினார். அதாவது பனூ ஃபுஸாரா கோத்திரத்தாரே, இறைவன் மீது ஆணையாக! இந்த துலைஹா பொய்யன் ஆவான். எனவே நீங்கள் திரும்பி செல்லுங்கள் என்றார். அதனால் முழு ஃபுஸாரா சமுதாயமும் போரிலிருந்து விலகிக் கொண்டது. அந்த மக்களுக்கு தோல்வி கிடைத்தபோது அவர்கள் ஓடிவிட்டனர். மேலும் துலைஹாவைச் சுற்றி ஒன்று திரண்டு தாங்கள் எங்களுக்கு என்ன கட்டளை வழங்குகின்றீர்கள்? என்று கேட்கத் தொடங்கினர். அதற்கு முன்பாகவே துலைஹா தனக்காக குதிரையையும் தனது மனைவி நுவாஸாவிற்காக ஒட்டகத்தையும் தயார் செய்து வைத்திருந்தான்.

அவன் எழுந்து நின்றான். மேலும் பாய்ந்து சென்று தனது குதிரையில் சவாரி செய்துகொண்டான். மேலும் தனது மனைவியையும் அதில் சவாரி செய்ய வைத்து அவளுடன் ஓடிவிட்டான். மேலும் உங்களில் எவர் ஆற்றல் படைத்துள்ளாரோ அவர் நான் செய்ததைப் போன்று செய்யட்டும்.மேலும் தனது குடும்பத்தை காப்பாற்றிக் கொள்ளட்டும். போர் மைதானத்திலிருந்து ஓடிவிடுங்கள் என்று துலைஹா தனது தோழர்களிடம் கூறினான். பின்னர் துலைஹா கூஷியா என்ற வழியில் சென்றான். எந்த அளவுக்கென்றால் சிரியா சென்றடைந்தான். அவனது கூட்டமும் சிதறுண்டுவிட்டது. அவர்களில் பெரும்பாலாரை அல்லாஹ் கொன்றுவிட்டான். ஏராளமான நபர்கள் கொல்லப்பட்டனர். ஓர் அறிவிப்பிற்கேற்ப துலைஹா போர் மைதானத்திலிருந்து ஓடி நகஃ எனும் இடத்தில் பனூகலப் கோத்திரத்தினரிடம் சென்று தங்கினான். அங்கு சென்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டார். நகஃ என்பதும் தாயிஃப் நகரத்தின் சுற்றுவட்டாரத்திலுள்ள மக்காவிற்கு அருகில் உள்ள ஓர் ஊராகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணம் வரை அவர் பனூகலபிடம் தான் தங்கியிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

(தாரீகுத் தபரி தொகுதி 2 பக்கம் 261-262,264 தாருல் குதுபில் இல்மிய்யா லெபனான் 2012) (முஃஜமுல் பலதான் தொகுதி 5 பக்கம் 346 தொகுதி 2 பக்கம் 215)

பனூஆமிர் கோத்திரத்தினர் தனது

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

சிறப்பான மற்றும் சாதாரண நபர்களுடன் அவனுக்கு அருகில் அமர்ந்திருந்தனர். சுலைம் மற்றும் ஹவாஸின் கோத்திரங்களின் நிலையும் அவ்வாறே இருந்தது. பின்னர் அல்லாஹ் பனூஃபஸாரா மற்றும் துலைஹாவிற்கு மிக மோசமான தோல்வியை வழங்கினான். எந்த மார்க்கத்திலிருந்து நாம் வெளியேறினோமோ மீண்டும் நாம் அதே மார்க்கத்திலேயே நுழைகிறோம் என்று கூறியவாறு அந்த கோத்திரத்தினர் வந்தனர்.

அவர்கள் சுயமே வந்து இஸ்லாத்தில் நுழைந்துவிட்டனர். நாங்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது நம்பிக்கை கொள்கிறோம். மேலும் எங்களது உயிர் மற்றும் செல்வம் தொடர்பாக அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறினர்.

(தாரீகுத் தபரி தொகுதி 2 பக்கம் 260-262 தாருல் குதுபில் இல்மிய்யா லெபனான் 2012)

தாரிகே தபரி நூலின் ஓர் அறிவிப்பு உள்ளது. அதாவது புஸாஹா வாசிகளின் தோல்விக்குப் பிறகு பனூ ஆமீர் கோத்திரத்தினர் வந்தனர். எந்த மார்க்கத்திலிருந்து நாங்கள் வெளியேறினோமோ அந்த மார்க்கத்தில் நாங்கள் நுழைகிறோம். புஸாஹா வாசிகளுடன் அதாவது அஸது, கத்ஃபான் மற்றும் தே கோத்திரங்களுடன் செய்யப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அவர்களிடம் பைஅத் வாங்கினார்கள். அவர்கள் அனைவரும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளுதல் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கட்டுப்படுதலை மேற்கொண்டனர். அந்த பைஅத்தின் சொற்கள் இவ்வாறு இருந்தன. உங்களிடமிருந்து அல்லாஹ்வின் உடன்படிக்கை பெறப்படுகின்றது. அதாவது நாங்கள் நிச்சயமாக அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்கிறோம். நிச்சயமாக தொழுகையை நிலைநாட்டுவோம். மேலும் நிச்சயமாக ஸகாத் கொடுப்போம். இதே விஷயங்களில் நீங்கள் உங்களது பிள்ளைகள் மற்றும் பெண்களிடமிருந்தும் பைஅத் வாங்குவீர்கள் என்று கூறப்பட்டுவிட்டது. அதற்கு அவர்கள் ஆம் என்று கூறினர்.

(அல் காமில் ஃபீத் தாரீக் தொகுதி 2 பக்கம் 210-211, பதிப்பு-தாருல் குதுபில் இல்மிய்யா 2003)

அஸத், கத்ஃபான், ஹவாஸின், சுலைம் மற்றும் தே கோத்திரங்களில் மார்க்கப் புறக்கணிப்பின் நிலையில் தங்களிடத்தில் இருந்த முஸ்லிம்களை எரித்து அவர்களின் உடல்களை சிதைத்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்திய நபர்களை முஸ்லிமுகளிடம் ஒப்படைத்த மக்களைத் தவிர்த்து வேறு எவரின் பைஅத்தையும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி கொலை செய்து அவர்களின் வீட்டை எரித்து அவர்களின் உடல்களை சிதைத்து எரித்த எங்கள் மக்களை உங்களிடம் ஒப்படைத்துவிடுவோம் என்ற நிபந்தனையின் கீழ் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் பைஅத் வாங்கினார்கள். அந்த குற்றவாளிகளை எங்களிடம் ஒப்படைத்துவிட்டால் பின்னர் உங்களின் பைஅத் ஒப்புக் கொள்ளப்படும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். குற்றவாளிகளாகிய அவர்கள் அனைவரையும் ஒப்படைக்க வேண்டும். எனவே அந்த குற்றவாளிகள் அனைவரையும் அந்த கோத்திரங்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்துவிட்டன. அப்போது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவர்களின் பைஅத்தை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். எவர்கள் முஸ்லிம்கள் மீது அநீதியிழைத்தனரோ மேலும் அநீதியிழைக்கக் கூடியவர்களாக இருந்தனரோ அவர்களின் உடல் பாகங்கள் துண்டிக்கப்பட்டன. மேலும் அவர்கள் நெருப்பில் எரிக்கப்பட்டனர்.

(அல்இஸ்திகஸல் அக்பார் தவ்லுல் மக்ரிபுல் அக்ஸா தொகுதி 1 பக்கம்76 பதிப்பு- தாருல் கிதாப் 1997)

எவ்வாறிருப்பினும் நான் முந்தைய குத்பாக்களில் கூறியிருந்ததைப் போன்று முஸ்லிம்கள் மீது அவர்கள் அநீதியிழைத்திருந்தனர். அவர்களுக்குரிய தண்டனையாக அவர்களுடன் அவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் எழுதிய ஒரு கடிதத்தின் குறிப்பு கிடைக்கின்றது.ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் குஸா பின் புஹைரா மற்றும் அவனது சில கூட்டாளிகளை கயிற்றால் கட்டிவிட்டார்கள். பின்னர் குஸா மற்றும் ஏனைய கைதிகளை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். மேலும் அன்னாருக்கு இவ்வாறு கடிதமும் எழுதினார்கள். அதாவது பனூ ஆமிர் இஸ்லாத்திலிருந்து விலகினர். பின்னர் காத்திருந்து மீண்டும் இஸ்லாத்தில் நுழைந்துவிட்டனர். எந்த கோத்திரங்களுடன் நான் போர் புரிந்தேனோ அல்லது போர் புரியாமலேயே எவர்களுடன் சமாதானம் செய்து கொள்ளப்பட்டுள்ளதோ அவர்களில் எவர்களின் பைஅத்தும் ஒப்புக் கொள்ளப்படவில்லை. எந்த அளவுக்கென்றால் முஸ்லிம்கள் மீது பலவகையில் அநீதியிழைத்த அந்த மக்களை என்னிடம் கொண்டு வரவேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் மட்டுமே அவர்களின் பைஅத் ஏற்றுக்கொள்ளப்பட்டது. குற்றவாளிகளை நான் கொன்றுவிட்டேன். குஸா மற்றும் அவனது கூட்டாளிகளை தங்களிடம் அனுப்புகிறேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் பெயரில் கடிதம் ஒன்றை எழுதினார்கள் என்று நாஃபிஹ் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)அவர்கள் அந்தக் கடிதத்தில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு பதில் அனுப்பினார்கள். நீங்கள் செய்தவற்றிற்கும் நீங்கள் பெற்ற வெற்றிகளுக்கும் அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக.நீங்கள் உங்கள் பணிகளில் அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொண்டிருங்கள். அல்லாஹ் கூறுகின்றான்.

إِنَّ اللَّهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا وَّالَّذِينَ هُمْ مُّحْسِنُونَ

நிச்சயமாக இறையச்சத்தை மேற்கொள்பவர்களுடனும் நன்மை செய்பவர்களுடனும் அல்லாஹ் இருக்கின்றான். (அந்நஹ்ல்:129)

நீங்கள் அல்லாஹ்வின் பணிகளில் முழுமையான முயற்சி செய்யுங்கள். சோம்பல் காட்டாதீர்கள். ஒரு முஸ்லிமை கொலை செய்த நபர் ஒருவர் உங்கள் கைகளில் சிக்கினால் அவரை கண்டிப்பாக கொலை செய்துவிடுங்கள். மற்றவர்கள் படிப்பினை பெறும் வகையில் அவரை கொலை செய்துவிடுங்கள். இறைவனின் கட்டளைக்கு மாறுசெய்தவர்களையும் இஸ்லாத்திற்கு எதிரியாக இருப்பவர்களையும் கொலை செய்வதால் இஸ்லாத்திற்கு நன்மை கிடைக்கும் என்றால் அவர்களை கொலை செய்யலாம். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒரு மாதம் புஸாஹாவில் தங்கியிருந்து அதுபோன்ற மக்களை (எதிரிகளை) எல்லா பக்கமும் சோதனையிட்டு தேடி கைது செய்துவந்தார்கள்.

(தாரீகுத் தபரி தொகுதி 2 பக்கம் 25 வெளியீடு தாருல் குதுபில் இல்மிய்யா லெப்னான் 2012)

குஸா பின் ஃபுஹைரா மற்றும் உயைய்னா பின் ஹிஸன் கைதாகி மதீனாவிற்கு வந்தது தொடர்பாக தாரீகே தபரியில் இவ்வாறு குறிப்பு வருகின்றது.

அதாவது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பனூஆமிர் கோத்திரத்தின் விவகாரங்களை தீர்த்து வைத்து அவர்களிடம் பைஅத் வாங்கியபோது உயைய்னா பின் ஹிஸன் மற்றும் குர்ரா பின் புஹைராவை கைது செய்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தபோது இவ்வாறு கூறினார்.

இறைத் தூதரின் கலீஃபா அவர்களே! நான் முஸ்லிம் ஆவேன். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் தான் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்கு சாட்சியாவார்கள். அன்னார் பயணத்தின் போது என்னிடம் வந்தார். நான் அன்னாரை எனது விருந்தினராக ஆக்கிக் கொண்டேன். நான் அன்னாரை மதித்து கண்ணியப் படுத்தினேன். மேலும் அன்னாருக்கு பாதுகாப்பு வழங்கினேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை அழைத்து அதனை உண்மைப் படுத்த விரும்பினார்கள. ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் அனைத்து சம்பவங்களையும் எடுத்துரைத்தார்கள். குர்ரா கூறியவற்றையெல்லாம் எடுத்துரைத்தார்கள். ஸகாத் தொடர்பாக அவரது உரையாடலை எடுத்துரைத்தபோது நிறுத்துங்கள். இதற்கு மேல் கூறாதீர்கள் என்று குர்ரா கூறினார். அப்போது அல்லாஹ்வின் கருணை உண்டாகட்டும்! என்று அன்னார் கூறினார்கள். அது நடக்காது. நான் முழு விஷயத்தையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் எடுத்துரைப்பேன் என்று ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் அனைத்து உரையாடலையும் எடுத்துரைத்துவிட்டார்கள். ஸகாத் தொடர்பாக முதலில் இந்த கோரிக்கையை நிறுத்திக் கொண்டால் பின்னர் அரபுகள் கூற்றை செவிமடுப்பார்கள் என்றார். அதாவது ஸகாத் வசூல் செய்யக் கூடாது என்றார். அப்போது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் நீர் ஒருவகையில் காஃபிர் ஆகிவிட்டீரே என்று கூறியபோது குர்ரா கூறினார்.அப்படியென்றால் ஸகாத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயம் செய்தால் ஸகாத் கொடுக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதை நாங்கள் இணைந்து முடிவு செய்வோம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவனை மன்னித்துவிட்டார்கள். மேலும் அவனது உயிரைக் காப்பாற்றி விட்டார்கள்.

உயைய்னா பின் ஹிஸனின் இரண்டு கைகளும் கயிற்றால் கழுத்தில் கட்டப்பட்ட நிலையில் மதீனாவிற்கு வந்தான். மதீனாவின் சிறுவர்கள் அவனை பேரீத்தம் மர கிளைகளால் அடித்துக் கொண்டிருந்தனர். மேலும் அல்லாஹ்வின் எதிரியே! நீ ஈமான் கொண்ட பிறகு காஃபிர் ஆகிவிட்டாயோ? என்று அவர்கள் கூறினர். அதற்கு இறைவன் மீது ஆணையாக நான் இன்று வரை அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்று அவன் கூறினான்.

மற்றொரு நூலாசிரியர் எழுதுகின்றார் :

உயைய்னா இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களிடம் ஆஜர்படுத்தப்பட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அவன் எப்படிபட்ட மன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறையைக் கண்டான் என்றால் அதற்கான நம்பிக்கை அவனுக்கு இருந்திருக்கவில்லை. அன்னார் (ரலி) அவர்கள் அவனது கையை திறந்துவிடும்படி கட்டளையிட்டார்கள். தவ்பா செய்யும்படி அவனிடம் கூறப்பட்டது. உயைய்னா கலப்படமற்ற தவ்பா செய்வதாக அறிவித்தார். மேலும் தனது குற்றங்களை ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித்தார். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். பின்னர் நல்ல முறையில் இஸ்லாத்தை பேணி நடந்து வந்தார்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் மொழிபெயர்த்த ஸய்யிதுனா அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் சாதனை என்ற நூல் பக்கம் 326 அல்ஃபுர்கான் பதிப்பகம் முஸஃபர் கட் பாகிஸ்தான்)

பொய் நபித்துவ வாதியும் கிளர்ச்சியாளனுமான துலைஹா அஸதியும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார். அது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. அதாவது துலைஹா இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு இந்த விஷயம் காரணமாக அமைந்தது. அதாவது அஸது கத்ஃபான் மற்றும் பனூஆமிர் கோத்திரத்தினர் முஸ்லிமகளாகிவிட்டனர் என்ற தகவல் அவருக்கு கிடைத்தபோது அவரும் முஸ்லிமாகிவிட்டார். பின்னர் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அமாரத்தில் உம்ரா செய்வதற்காக அவர் மக்கா புறப்பட்டார். அவர் மதீனாவின் சுற்றுப் பகுதியை கடந்தபோது இவர் துலைஹா ஆவார் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறப்பட்டது. அதற்கு நான் என்ன செய்வது? அவரை விட்டுவிடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் அவருக்கு இஸ்லாத்தின் பக்கம் வருவதற்கு நேர்வழி வழங்கிவிட்டான் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். துலைஹா மக்காவை நோக்கி சென்றார். உம்ராவை நிறைவேற்றினார். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆன பிறகு அன்னாரிடம் பைஅத் செய்வதற்காக வந்தார். நீ! உக்காஷா மற்றும் சாபித் (ரலி) ஆகியோரின் கொலையாளி ஆவாய். இறைவன் மீது ஆணையாக! நீ ஒருபோதும் எனது விருப்பத்திற்குரியவராக இருக்க முடியாது. அதற்கு துலைஹா கூறினார். அமீருல் மூஃமினீன் அவர்களே! எனது கரத்தால் எந்த இருவருக்கு இறைவன் கண்ணியம் வழங்கியுள்ளானோ அவர்களைக் குறித்து தாங்கள் ஏன் துன்பம் அடைகின்றீர்கள்?

அவர்கள் ஷஹீதாகியுள்ளனர். மேலும் அல்லாஹ் அவர்கள் இருவரின் கரங்களால் என்னை இழிவடைய செய்யவில்லை. அதாவது நான் இழிவடையவில்லை.

அவர்களின் தாக்குதல்களால் நான் மரணிக்கவில்லை. இல்லையென்றால் நான் நரகத்திற்கு சென்றிருப்பேன். இன்று இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு அல்லாஹ்வின் அருளைப் பெறுபவனாக ஆகியுள்ளேன். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவரிடம் பைஅத் வாங்கிவிட்டார்கள். ஏமாற்றுக்காரரே! உனது அந்த பாதிரித் தன்மையில் இன்னும் ஏதும் மீதம் உள்ளதா? என்று கேட்டார்கள். அதாவது நீர் பாதிரியாக இருந்தீர். இப்போது அந்த பாதிரி வேலைகளில் எதுவும் எஞ்சியிருக்கிறதா? ஒன்றிரண்டு முறை ஓதி ஊதிவிடுகிறேன் என்று அவன் கூறினார். பின்னர் அவர் தனது சமுதாயத்தின் தங்குமிடத்தின் பக்கம் சென்றார். மேலும் அங்கேயே தங்கிவந்தார்.

(தாரீகே தபரி தொகுதி 2,பக்கம் 264 தாருல் குதுபில் இல்மிய்யா லெப்னான் வெளியீடு 2012)

ஈராக் போர்களில் துலைஹா ஈரானியர்களுக்கெதிராக சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தினார்.

முஸ்லிமான பிறகு ஈராக் போர்களில் அவர் போர்புரிந்து வந்தார். சிறப்பாக சண்டையிட்டார். நஹாவந்த் போரில் ஹிஜ்ரி 21 ஆம் ஆண்டு ஷஹீதானார். (முஹம்மது ஹுஸைன் ஹேகல் எழுதிய ஹஸ்ரத் ஸய்யிதுனா அபூபக்ர் (ரலி) அவர்கள் என்ற நூல் பக்கம் 144-புக் கார்கனர் ஷோரூம் புக் ஸ்டீர்ட், ஜெஹலம் - பாகிஸ்தான்) (அல்அஸாபா ஃபிய் தம்மீஸுஸ் ஸஹாபா தொகுதி 3, பக்கம் 441 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் வெளியீடு 2005)

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஸஃபருக்கு செல்வது:- ஸஃபர் என்பது ஒரு பகுதியாகும். அதன் பக்கமும் உம்மே ஸிமல் சல்மா பின்த் உம்மே ஃபிர்காவை நோக்கியும் அன்னார் முன்னேறினார்கள். உம்மே ஸிமலின் பெயர் சல்மா பின்த் மாலிக் பின் ஹுஸைஃபா ஆகும். அவள் தனது தாயார் உம்மே ஃபிர்கா பின்த் ரபீயாவுடன் ஒப்புமை கொண்டிருந்தாள். அவள் கண்ணியத்திலும் பிரபல்யத்திலும் தனது தாயை போன்றிருந்தாள். அவளிடம் உம்மே ஃபிர்காவின் ஒட்டகமும் இருந்தது.

(தாரீகே தபரி தொகுதி 2, பக்கம் 265 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் வெளியீடு 2012)

உம்மே ஃபிர்காவின் அறிமுகம் இவ்வாறாகும். உம்மே ஃபிர்காவின் பெயர் ஃபாத்திமா பின்த் ரபீயா ஆகும்.அவர் ஃபுஸாரா கோத்திரத்தின் தலைவியாக இருந்தார். இந்தப் பெண்மணி தனது வலிமை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஒரு முன்னுதாரணமான பெண்மணியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தார். அவரது வீட்டில் எப்போதும் ஐம்பது வாள்கள் தொங்கிக் கொண்டிருந்தன. ஐம்பது ஆண் வாள்வீரர்கள் அங்கு எப்போதும் இருந்து வந்தனர். அவர்கள் அனைவரும் அவரது மகன்களும் பேரப்பிள்ளைகளும் ஆவர். அவரது ஒரு மகனின் பெயர் ஃபிர்கா ஆகும்.

அதன் காரணமாக அவருக்கு உம்மே ஃபிர்கா என்ற சுட்டுப் பெயர் இருந்தது. அவரது இயற்பெயர் ஃபாத்திமா பின்த் ரபீயாவாக இருந்தது. மதீனாவிலிருந்து ஏழு இரவு பயணத் தொலைவில் இருந்த வாதிவுல் குராவின் ஒரு பக்கத்தில் அவரது வீடு இருந்தது.

(ஹகீம் மஹ்மூத் அஹ்மது ஸஃபர் அவர்களின் இஸ்லாத்தின் தூதரும் போர்களும் என்ற நூல்-பக்கம் 447, வெளியீடு-ஷஃபீக் பிரஸ்)

உம்மே ஃபிர்கா எனும் கோத்திரத்துடன் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு போர் நிகழ்ந்தது. உம்மே ஃபிர்காவின் மீது போர் தொடுப்பதற்கான ஒரு காரணம் என்னவென்றால் அவர் மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கும் சதித் திட்டம் தீட்டியிருந்தார். இது தொடர்பாக ஒரு நூலாசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார். ஒரு முறை அவர் தனது முப்பது மகன்கள் மற்றும் பேரன்களை கொண்ட ஒரு படையை ஆயத்தம் செய்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுங்கள் என்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கொலை செய்யுங்கள் என்றும் கூறினார். எனவே அந்த குழப்பவாதி பெண்ணை முஸ்லிம்கள் தீர்த்துக் கட்டினர். (பீர் முஹம்மது அக்ரம் ஷாஹுல் அஸ்ஹரி அவர்கள் எழுதிய ஷியாவுன் நபி (ஸல்) என்ற நூல் தொகுதி 4, பக்கம் 121, வெளியீடு தக்லீக் மர்கஸ் பிரின்டர் லாஹூர்-ஹிஜ்ரி 1420)

அதன் இரண்டாவது காரணம் என்னவென்றால் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) வணிக நோக்கத்துடன் சிரியாவை நோக்கி புறப்பட்டார்கள். அன்னாரிடம் ஏனைய சஹாபிகளின் வணிக செல்வங்கள் இருந்தன. அன்னார் வாதிவுல் குராவை அடைந்ததும் ஃபுஸாரா கோத்திரத்தின் கிளை கோத்திரமான பனூ பதர் கோத்திரத்தின் ஏராளமான நபர்கள் புறப்பட்டனர். அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி)அவர்கள் மற்றும் அன்னாரின் தோழர்களை கடுமையாக அடித்து தாக்கினர். மேலும் அனைத்து சாமான்களையும் பறித்துக் கொண்டனர். எனவே அவர்கள் திரும்பி வந்து நபித்துவ அவையில் நடந்த அந்த அனைத்து சம்பவங்களையும் எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த கொள்ளையர்களை தண்டிப்பதற்காக அன்னாருடன் ஒரு படையை அனுப்பினார்கள். (பீர் முஹம்மது அக்ரம் ஷாஹுல் அஸ்ஹரி அவர்கள் எழுதிய ஷியாவுன் நபி (ஸல்) என்ற நூல் தொகுதி 4, பக்கம் 120, வெளியீடு ஷியாவுல் குர்ஆன் பப்ளிகேஷன்ஸ் லாஹூர்-ஹிஜ்ரி 1420)

உம்மே ஃபிர்காவின் மகள் உம்மே ஸிமல் சல்மாவின் சம்பவம் இவ்வாறாகும். அதாவது கத்ஃபான், தே, சுலைம், மற்றும் ஹவாஸின் கோத்திரங்களின் சில மக்கள் புஸாஹாவில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் கரங்களால் தோல்வியைத் தழுவியிருந்தனர். அவர்கள் தப்பியோடி உம்மே ஸிமல் சல்மா பின்த் மாலிகிடம் சென்று சேர்ந்தனர்.

மேலும் முஸ்லிம்களுடன் போர் புரிந்து உயிரை அர்ப்பணித்து விடுவோம். ஆனால் பின்வாங்க மாட்டோம் என்று வாக்குறுதி அளித்தனர்.

(ஆசிரியர் உமர் அபூ அன்னஸர் அவர்களின் ஸய்யிதுனா சித்தீக் அக்பர் (ரலி) எனும் நூல் பக்கம் 610 முஸ்தாக் புக் கார்னர் உருது பஜார் லாஹூர்)

கத்ஃபானில் தோல்வியடைந்த மக்கள் ஸஃபரில் ஒன்று கூடினார்கள். இந்த ஸஃபர் என்பது மதீனா மற்றும் பஸராவிற்கு செல்லும் பாதையிலுள்ள ஒரு இடமாகும். அது ஹவ்அபிற்கு அருகிலுள்ள ஒரு இடமாகும். அங்கு ஒரு கிணறு உள்ளது. அங்கு உம்மே ஸிமல் சல்மா அவர்களுக்கு ஏற்பட்ட தோல்வியில் அவர்களுக்கு ரோஷமூட்டினாள். மேலும் போருக்கு கட்டளையிட்டாள். பின்னர் சுயமே பல்வேறு கோத்திரங்களிடம் மீண்டும் மீண்டும சென்று ஹஸ்ரத் காலித் (ரலி)அவர்களுடன் போர் புரிவதற்கு தூண்டிவிட்டாள். எந்த அளவுக்கென்றால் அந்த மக்கள் அவர்களிடம் ஒன்றுதிரண்டனர். மேலும் போரிட துணிந்தனர். அவள் முஸ்லிம்களுக்கெதிராக போரிட தூண்டக்கூடியவளாக இருந்தாள். எல்லா புறமிருந்தும் சிதறுண்ட மக்கள் அவளிடம் வந்துவிட்டனர். அதற்கு முன்னர் உம்மே ஃபிர்காவின் வாழ்க்கையில் இந்த உம்மே ஸிமல் சல்மா கைதியாக சென்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சந்தித்தார்கள். அன்னார் அவளை விடுதலை செய்திருந்தார்கள்.அவர் சிறுது காலம் அன்னாரிடம் தங்கியிருந்தாள். பின்னர் தனது சமுதாயத்தினரிடம் சென்றுவிட்டாள். அங்கு சென்று முர்தத் ஆகிவிட்டாள்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 211.திக்ர் ரத்தா பனி ஆமிர்,வ ஹவாஸின் வ சலீம் வெளியீடு தாருல் குதுபில் இல்மிய்யா 2003)(அல் முஃஜமுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 68, தொகுதி 2 பக்கம் 360)

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்தபோது அன்னார் (ரலி) அந்த நேரத்தில் குற்றவாளிகளை கைது செய்வது, ஸகாத் வசூல் செய்வது, இஸ்லாய பிரச்சாரம், மக்களுக்கு ஆறுதல் அளிப்பது போன்ற பணிகளில் மும்முரமாக இருந்தார்கள். எனவே ஆற்றலும் வலிமையும் அதிகரித்துக் கொண்டிருந்த உம்மே ஸிமல் சல்மாவிற்கு எதிராக அன்னார் (ரலி) முன்னேறினார்கள். அப்போது

அவளது விவகாரம் மிக தீவிரம் அடைந்திருந்தது. எனவே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவளுக்கெதிராகவும் அவளது கூட்டத்தினருக்கெதிராகவும் போரிடுவதற்கு முன்னேறியிருந்தார்கள். மிக கடுமையான போர் நிகழ்ந்தது. உம்மே ஸிமல் சல்மா அப்போது தனது தாயைப் போன்று மிகவும் ஒய்யாரமாக தனது தாயின் ஒட்டகத்தில் சவாரி செய்து அமர்ந்திருந்தார். இரண்டு படைகளுக்கிடையேயும் கடும் சண்டை நிகழ்ந்தது. உம்மே ஸிமல் ஒட்டகத்தில் அமர்ந்து கொண்டு ஆத்திரமூட்டும் சொற்பொழிவுகளால் தொடர்ந்து படையினருக்கு உற்சாகம் வழங்கிக் கொண்டிருந்தாள். முர்தத்களும் மிகவும் தைரியத்துடன் உயிரைக் கொடுத்து சண்டையிட்டு வந்தனர்.

உம்மே ஸிமலின் ஒட்டகத்தைச் சுற்றிலும் மேலும் நூறு ஒட்டகங்கள் இருந்தன. அதில் பெரும் பெரும் வீரர்கள் இருந்தனர். மிகவும் துணிவுடன் உம்மே ஸிமலிற்கு பாதுகாப்பு கொடுத்து வந்தனர். முஸ்லிம் வீரர்கள் உம்மே ஸிமலிற்கு அருகில் செல்வதற்கு உயிரை கொடுத்து முயற்சி செய்தனர். ஆனால் அவளது மெய்காப்பாளர்கள் ஒவ்வொரு முறையும் அவர்களை பின்வாங்கச் செய்துவிட்டனர். மொத்தத்தில் நூறு நபர்களை கொன்ற பிறகு இறுதியில் முஸ்லிம்கள் உம்மே ஸிமலின் ஒட்டகத்திற்கு அருகில் சென்றடைந்தார்கள். அங்கு சென்ற உடனேயே அவர்கள் ஒட்டகத்தின் கால்களை வெட்டிவிட்டார்கள். மேலும் உம்மே ஸிமலை கொலை செய்தார்கள். அவளின் தோழர்கள் அவளின் ஒட்டகம் சாய்க்கப்படுவதையும் அவள் கொல்லப்படுவதையும் கண்டபோது அவர்கள் தைரியம் இழந்தனர். மேலும் உணர்விழந்த நிலையில் போர் மைதானத்திலிருந்து தலைதெறிக்க ஓடத் தொடங்கினர். இவ்வாறு இந்த குழப்பத்தின் நெருப்பு தணிந்தது. அரேபிய தீபகற்பத்தின் வடகிழக்குப் பகுதியில் மார்க்கப் புறக்கணிப்பு மற்றும் கிளர்ச்சி முடிவுக்கு வந்தது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் உருது மொழியாக்க நூல் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) பக்கம் 156-157 பதிப்பு புக் கார்னர் ஜெஹ்லம்) ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இந்த வெற்றியின் நற்செய்தியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்பினார்கள்.

(தாரீகுத் தபரி தொகுதி 2 பக்கம் 256 வெளியீடு தாருல் குதுபில் இல்மிய்யா லெப்னான் 2012)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றிய இந்த நற்குறிப்பு எதிர்வரும் நாட்களிலும் எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ். தற்போது இந்த அளவிலேயே எடுத்துரைக்கின்றேன். தற்போது இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பு எடுத்துரைக்கப்படும். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அன்னாரின் ஜனாஸா தொழுகையை நான் தொழ வைப்பேன்.

முதலாவதாக, ரஃபீக் அஹ்மது பட் சாஹிபின் மனைவி ஸாபிரா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் கடந்த தினங்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அல்லாஹ்வின் அருளால் மர்ஹூமா வஸிய்யத் செய்தவராக இருந்தார். மர்ஹூமாவைப் பற்றி அன்னாரின் மகன் இவ்வாறு எழுதியுள்ளார்;

தொழுகையை பேணக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், துஆ செய்யக் கூடியவராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும்,நல்இயல்பு கொண்ட பெண்மணியாகவும் மர்ஹூமா இருந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பும் பற்றும் இருந்தது. தொடர்ந்து முறையான ஏற்பாடுகளுடன் குத்பாக்களை கேட்டு வந்தார்கள். வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கு மிகவும் கண்ணியம் வழங்கி வந்தார்கள்.

அன்னாரின் மகனான நஸீம் பட் சாஹிப் நைஜீரியாவின் கடுனாவில் முரப்பியாக உள்ளார்கள். செயல்களத்தில் இருக்கும் காரணத்தால் தனது தாயாரின் ஜனாஸாவிலும் நல்லடக்கத்திலும் அன்னாரால் கலந்து கொள்ள முடியவில்லை. எனவே அன்னாரின் தாயாரின் ஜனாஸாவை தொழவைக்கிறேன். மர்ஹூமாவின் முழு குடும்பமும் அன்னாரின் கணவரும் அன்னாரின் ஏனைய மகன்களும் பேரன்மார்களும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் முன்னணியில் இருந்து வருகின்றனர்.

இரண்டாவது நற்குறிப்பு என்பது சுரய்யா ரஷீத் சாஹிபா அவர்களுடையதாகும். மர்ஹூமா ரஷீத் அஹ்மது பாஜ்வா சாஹிப் அவர்களின் மனைவியாவார்கள். ஏப்ரல் 20ஆம் தேதி கனடாவில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவரும் மிகவும் நல்ல பெண்மணியாக திகழ்ந்தார்கள். இறையச்சம் கொண்டவராகவும், துஆ செய்யக் கூடியவராகவும், ஏழைகளை பராமரிக்கக் கூடியவராகவும்,விருந்து உபசரிப்பு செய்பவராகவும்,எல்லாரிடமும் இனிமையாக பழகக் கூடியவராகவும் மர்ஹூமா திகழ்ந்தார்கள். நீண்ட காலமாக தமது முஹல்லாவின் லெஜ்னா தலைவியாக தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்துள்ளது. பிள்ளைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கும் அன்னாருக்கு அதிகமாக நற்பேறு கிடைத்துள்ளது. பின்னர் அன்னார் ரப்வா வந்துவிட்டார்கள். தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் தர்பிய்யத்திற்காக தனது அனைத்து சொத்துக்களையும் விற்று ரப்வாவிற்கு வந்து தனக்கான வீட்டை கட்டினார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னாரின் ஒரு மகன் ஸஃபீர் பாஜ்வா சாஹிப் ரப்வாவில் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார்கள். ஒரு மகள் ஜமாஅத் முரப்பியின் மனைவி ஆவார்.

அல்லாஹ் இவர்கள் இருவருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவர்களின் பிள்ளைகளுக்கும் அவர்களின் சந்ததிகளுக்கும் அவர்களின் நன்மைகளை தொடரச் செய்வதற்குரிய நற்பேறை வழங்குவானாக.

தமிழாக்கம் :

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23,24,25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறுவதற்கான நற்பேறு வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸியா, காதியான்)

(மல்ஃபூஸாத்... முதல் பக்கத் தொடர்ச்சி)

இருளடைந்து விடுகின்றது. உள்ளுக்குள்ளேயே அவனிடம் ஒரு கரையான் உருவாகிவிடுகின்றது.ஒரு பொய்க்காக பின்னர் அவனுக்கு ஏராளமான பொய்களை புனைய நேரிடுகின்றது. ஏனென்றால் அந்த பொய்யிற்கு உண்மையின் வடிவத்தை கொடுக்க வேண்டியது ஏற்படுகின்றது. இவ்வாறு உள்ளுக்குள்ளேயே அவனது நல்லொழுக்க மற்றும் ஆன்மீக ஆற்றல்கள் வீணாகிவிடுகின்றன. பின்னர் அவன் இறைவன் மீதே இட்டுக்கட்டுவதற்கும் இறைத் தூதர்களையும், இறைவன் புறமிருந்து வருபவர்களையும் பொய்படுத்துவதற்கும் கூட அவன் துணிந்து தைரியத்துடன் செயல்படுகிறான். மேலும் (அந்நிலையில்)

مَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا اَوْ كَذَّبَ بِاٰيٰتِهٖ

(பொருள் : அல்லாஹ்வைப் பற்றி பொய் புனையவோ அல்லது அவனுடைய அடையாளங்களைப் பொய்யாக்கவோ செய்பவனை விட அக்கிரமக்காரன் யார்? (6:22) என்று இறைவன் கூறுவதற்கேற்ப) அவன் இறைவனிடத்தில் அநீதியாளனாகிவிடுகிறான். நன்றாக நினைவிற்கொள்ளுங்கள். பொய் என்பது மிகவும் மோசமான தீமையாகும். மனிதனை (அது) அழித்துவிடுகின்றது. இதைவிட அதிகமாக பொய்யின் அபாயகரமான விளைவு என்னவென்றால் மனிதன் இறைத் தூதர்களையும் அவனது அடையாளங்களையும் பொய்படுத்தி (இறைத்)தண்டனைக்கு தகுதிபடைத்தவனாகிவிடுகிறான். எனவே உண்மையை மேற்கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத்-தொகுதி 1 - பக்கம் 333 காதியான் பதிப்பு 2016)

(தஃப்ஸீரே கபீர்... முதல் பக்கத் தொடர்ச்சி)

கியாமத்திற்கான சான்றாக இவ்வாறு அமைந்துள்ளது. அதாவது மனிதனின் வாழ்க்கை இந்த உலகத்துடனேயே முடிவடைந்து-விடுகின்றது என்றால் மனிதன் இதில் பிறக்க வேண்டும் சிறிது காலம் உண்ணவேண்டும் பின்னர் மரணித்துவிடவேண்டும் என்பதற்காக மட்டுமா அல்லாஹ் இவ்வளவு பெரிய உலகத்தை படைத்துள்ளான்.இந்த எண்ணம் முற்றிலும் அறிவிற்கெதிரானதாகும்.இந்த அளவு பெரிய அமைப்பை படைத்தது ஒரு மாபெரும் நோக்கத்திற்காகவே இருக்க முடியும். அந்த நோக்கம் முழுமையடைந்ததாக இவ்வுலகில் தென்படவில்லை. எனவே மனித வாழ்க்கை இந்த உலகத்துடனேயே முடிந்துவிடாமல் இருப்பதும், .இன்னும் கூறப்போனால் இந்த அமைப்பின் மகத்துவத்திற்கேற்ப ஒரு நீண்ட காலம் செல்வதும் அதில் இந்த அமைப்பின் மகத்துவத்திற்கேற்ப ஒரு உயர்வான அந்தஸ்தை அவன் பெறுவதும் அவசியமாகும்.

எனவே சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். முழு அமைப்பும் ஒரு பக்கம் இருக்கட்டும். சிறிதிலும் சிறிய பொருளில் கூட முடிவடையாத ரகசியங்களை அல்லாஹ் வைத்துள்ளான். மனித உடலையே எடுத்துக் கொள்ளுங்கள். அதன் அமைப்பு எவ்வளவு நுட்பமானதாக உள்ளது. ஆயிரக்கணக்கான மருத்துவர்களும் ஆராய்ச்சி வல்லுநர்களும் அதன் உண்மைத்துவத்தை கண்டறிவதில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும் மனித உடலுடன் தொடர்புடைய அந்த விவகாரங்களை முழுமையாக கண்டறிய முடியவில்லை.திருக்குர்ஆன் இறங்கிய காலத்திற்குப் பிறகு ஐரோப்பா அறிவியலில் எண்ணற்ற சிறப்பை பெற்றுள்ளது.ஆயினும் மனித உடலைப் பற்றி இதுவரை முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை.அவ்வாறிருக்க இந்த அளவிற்கு பரந்துபட்ட சட்டங்களின் கீழ் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ள மனித பிறப்பின் நோக்கத்தை கியாமத்தை மறுப்பவர்கள் ஏளனமாக கூறுவதை எவ்வாறு அறிவுப்பூர்வமானதாக புரிந்து கொள்ள முடியும்.?

அதேபோன்று இந்த அமைப்பு நபிமார்களின் வெற்றி மற்றும் அவர்களின் எதிரிகளின் அழிவிற்கும் சான்று பகிர்கின்றது. பூமியை வானத்திலிருந்து பிரித்துவிட்டால் அதன் நிலை என்னவாகும்? ஒரு நாள் கூட அது நிலைத்திருக்க முடியாது.எனவே ஆன்மீக வானத்துடன் தொடர்பை துண்டித்துக் கொண்டு தப்பித்துவிடலாம் என எண்ணம் கொள்பவர்கள் எவ்வளவு குருடர்களாக உள்ளனர். எவ்வாறு இந்த முழுமையான அமைப்பின் அங்கமாக இருக்கும்போதுதான் பூமி பாதுகாப்பாக இருக்க முடியுமோ அதுபோன்று ஆன்மீக அமைப்பின் அங்கமாக ஆகுவதன் மூலமே மனிதன் அழிவிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும்.இல்லையென்றால் அவன் தப்பிப்பதற்கு எந்த வழியும் இல்லை.அதிலும் குறிப்பாக இந்த அமைப்பின் மீது தாக்குதல் நடத்துபவராக இருக்கும் போது அவரது இரட்சிப்பு நிச்சயமாக சாத்தியமற்றதாகும். எனவே ஆன்மீக வானத்துடன் தொடர்பை துண்டித்துக் கொண்டதன் காரணமாக அவர்களின் எந்த ஒரு ஏற்பாடும் அவர்களுக்கு பயன்தராது.இன்னும் கூறப்போனால் தற்போது அவர்களின் அழிவு மற்றும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான நேரம் வந்துவிட்டது என்று ஹஸ்ரத் நபி (ஸல்)அவர்களை நிராகரிப்பவர்களுக்கு கூறப்பட்டுள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி4 பக்கம் 107 காதியான் பதிப்பு)

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, பாரத்)

(ஹுஸுர் அவர்களின் சுற்றுப்பயணம்... 12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுமட்டுமின்றி இன்னும் சில துஆக்கள் உள்ளன. உங்களுடைய தொழுகை புத்தகத்தில் தஷஹ்ஹுதிற்கு பிறகு எழுதப்பட்டுள்ள அந்த துஆக்களையே செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை. அவற்றை தவிர்த்து ஏராளமான துஆக்களை செய்ய முடியும். ஆக சில இமாம்கள் அத்தஹியாத் நிலையில் நீண்ட நேரம் அமர்கின்றனர். அவர்கள் அதிக துஆக்களை செய்து கொண்டிருப்பார்கள். அது உங்களுக்கு தெரிவதில்லை. எனவே இமாமிற்குப் பின்னால் நடைபெறும் தொழுகையில் இமாமின் துஆக்களை நீங்கள் கூறினாலும் கூறாவிட்டாலும் இமாம் ஓதியவை உங்களுக்காகவும் ஆகிவிடும். இமாம் செய்த துஆக்கள் உங்களுடைய ஹக்கிலும் அமைந்துவிடும். ஏனென்றால் நீங்கள் இமாமிற்கு பின்னால் இருக்கின்றீர்கள்.

கேள்வி : ஜெர்மனியில் ஹேஸன் மாநிலத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்ற முதல் இஸ்லாமிய ஜமாஅத் நாம் ஆவோம். அதன் மூலம் நாம் கிறித்தவ தேவாலயங்களுக்கு சமமாகிவிட்டோம். இனி நாமும் பள்ளிக்கூடங்கள் போன்றவையெல்லாம் உருவாக்குவோமா? மேலும் வரி போன்றவையெல்லாம் வசூல் செய்வோமா? என்று ஒரு வாகிஃபா சிறுமி கேட்டார்.

பதில் : இதற்கு பதிலாக ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். அதாவது பாகிஸ்தான் பாராளுமன்றம் நம்மை அரசு ரீதியில் முஸ்லிம் அல்லாதவராக ஆக்கிவிட்டது. ஜெர்மனி அரசாங்கம் நம்மை அரசாங்க முஸ்லிமாக ஆக்கிவிட்டது.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் :

தற்போது நமக்கு இந்த அந்தஸ்து கிடைத்துள்ளது. இனி நீங்கள் எல்லா விஷயங்களையும் செய்ய முடியும். உங்களிடத்தில் அவ்வளவு வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றன என்றால் நீங்கள் எல்லாம் செய்ய முடியும். ஆஃப்ரிக்காவிலும் நாம் (நமது ஜமாஅத்தை) பதிவு செய்துள்ளோம்.

(தொடரும்...)

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை- ஜுலை 5, 12 -2013)

* * * * * * *


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 09 June 2022 Issue No. 23

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜெர்மனி சுற்றுப் பயணம் - 2013

## வாகிஃபாத்தே நவ் பிள்ளைகளுடனான சந்திப்பு

கேள்வி – பதில்

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுகூர்ந்து வாகிஃபாத்தே நவ் பிள்ளைகளுக்கு கேள்வி கேட்பதற்கு அனுமதி நல்கினார்கள்.

கேள்வி : ஜமாத்தான தொழுகைகளை சுருக்கமாக தொழவேண்டும் என்று ஹதீஸில் வருகின்றது.இங்கு சுருக்கமாக என்பதன் பொருள் என்ன? இமாம் தொழுகை நடத்திக் கொண்டிருக்கும் போது சிலவேளைகளில் பின்னால் நின்று தொழுபவர்களின் கடைசி துஆக்கள் விடுபட்டுவிடுகின்றன. அதில் தவறு ஏதும் இல்லையே? என்று ஒரு வாகிஃபா சிறுமி கேட்டார்.

பதில் : இக்கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள் : ஜமாஅத்தான தொழுகைகளில் சுருக்கமாக தொழுவேண்டும் என்ற கட்டளை என்பது இமாமிற்கானதாகும். ஏனென்றால் (ஜமாஅத்தான தொழுகைகளில்) பல தரப்பட்ட மக்கள் பின்னால் நிற்கின்றனர். சிறுவர்களும் இருக்கின்றனர். முதியவர்களும் இருக்கின்றனர். சில முறை நோயாளிகளும் இருக்கின்றனர். எனவே மக்களுக்கு அதிக துன்பம் ஏற்படாமல் இருப்பதற்காக சுருக்கமாக தொழ வையுங்கள் என்று கட்டளையிடப்பட்டுள்ளது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் :

எனினும் சுருக்கம் என்பதும் பல தரப்பட்டதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுருக்கமான தொழுகை கூட நமது நீண்ட தொழுகையை விட பெரியதாக இருந்தது. அன்னாரின் நவாஃபில் தொழுகையை பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் : ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நவாஃபில்கள் எவ்வளவு நீளமானதாக இருந்தன? எவ்வளவு அழகுவாய்ந்தவையாக இருந்தன என்று எவரும் கேட்காதீர்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது ஒரு சம்பவத்தை கூறினார்கள் :

நாங்கள் பயணத்தில் இருந்தோம். அங்கு பழைய வரலாற்று சிறப்புமிக்க கட்டடத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். ஓர் இடத்தில் முஸ்லிம் மன்னர்களின் பழைய பள்ளிவாசல் இருந்தது. அங்கு நாங்கள் தொழத் தொடங்கினோம் ளுஹர் மற்றும் அஸர் தொழுகையை தொழ வேண்டியிருந்தது. அப்போது தொழுதவாறு எங்களுக்கு 35,40 நிமிடங்கள் ஆகிவிட்டன. இவ்வளவு நீளமான தொழகையை தொழுதோமா? என்று மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் :

எனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் நிலைமைக்கேற்றவாறு தொழுகை சிறிதாகவோ பெரிதாகவோ இருக்கின்றன. சமீபத்தில் நான் அமெரிக்கா சென்றிருந்தேன். நீங்கள் நீண்ட ருகூ செய்கின்றீர்கள். ருகூவில் என்ன துஆ செய்கின்றீர்கள்? எங்களுக்கும் கூறுங்கள் என்று ஒரு சிறுவன் எனக்கு கடிதம் எழுதினான்.எனவே பல்வேறு சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கேற்ப தொழுகைகளை நிறைவேற்றுவதில் நேரம் கூடவோ குறையவோ செய்கின்றது. ஆனால் ஒரு முதியவர் இருமிக்கொண்டிருப்பதை நான் உணர்ந்தாலோ அல்லது ஒரு குழந்தை அழுது கொண்டிருந்தாலோ உடனடியாக தொழுகையை நான் சுருக்கமாக தொழுதுவிடுகிறேன். ஏனென்றால் ஹதீஸில் இவ்வாறே வந்துள்ளது. அதாவது நான் அதுபோன்ற நிலைமைகளில் தொழுகையை சிறிதாக்கிக் கொள்கிறேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் :

எனவே தொழுகையை சுருக்கமாக தொழுவது என்பது பல்வேறு நிலைமைகளில் பலதரப்பட்டதாக அமைகின்றது. எனினும் பொதுவாக எமது தொழுகைகள் பத்திலிருந்து பதினாங்கு நிமிடத்திற்குள் நிறைவடைந்து விடுகின்றன. இது சுருக்கமான தொழுகையே ஆகும். இதை விட அதிகமாக சுருக்கமாக எவ்வாறு தொழமுடியும்? ஆனால் சில அஹ்மதி அல்லாதவர்கள் இருக்கின்றனர். அவர்கள் சுருக்கமாக என்பதற்கு மாற்றமான பொருள் கொண்டுவிட்டனர். நமது ஓர் அஹ்மதி அல்லாத ஊழியர் பல்கலைகழக அலுவலகத்தில் இருந்தார். எங்களது மவ்லவி சாஹிப் மிக நன்றாக தராவீஹ் தொழுகை நடத்துகின்றார் என்று கூறிவந்தார். எப்படி? என்று நான் கேட்டேன். அவர் கூறினார். அவர் எவ்வளவு வேகமாக திருக்குர்ஆன் ஓதுகின்றார் என்றால் கேட்பதற்கே இன்பமாக இருக்கின்றது. அப்போது நான் அவரிடம் எவ்வளவு நேரத்தில் அவர் தொழ வைக்கின்றார் என்று கேட்டேன். நாங்கள் எட்டு ரக்கத்துகள் தொழுகின்றோம். அதிகபட்சமாக பன்னிரண்டு நிமிடங்கள் ஆகின்றன. இந்த பன்னிரண்டு நிமிடங்களில் (திருக்குர்ஆனின்) ஒரு முழு பாராவையும் அவர் ஓதிவிடுகின்றார். ஸஜ்தாவும் செய்துவிடுகின்றார். ருகூவும் செய்துவிடுகின்றார். கியாமும் செய்துவிடுகின்றார் என்று அவர் பதிலளித்தார். ஆக இதுபோன்ற சுருக்கமான தொழுகையை தொழுவதற்கு கட்டளை தரப்படவில்லை. சுருக்கமான தொழுகை என்பது பொறுப்புமிக்கனதாகும். அதனை எப்போதும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

சில இமாம்கள் மௌனமான தொழுகையில் வேகவேகமாக தொழுகின்றனர். சூராஃபாத்திஹாவும் ஓதுகின்றனர். பிறகு சுருக்கமாக சூராவையும் ஓதிவிடுகின்றனர். ஆனால் பின்னால் நிற்கும் மற்ற நபர்கள் அப்போது சூராஃபாத்திஹாவே ஓதி கொண்டிருக்கின்றனர். இமாமின் வேகத்தின் காரணமாக சில மக்களால் சூராஃபாத்திஹா கூட முழுமையாக ஓத முடியாமல் இருக்கும். ஆக இமாம் ஓதியவை பின்னால் நின்றுதொழுபவர்களுக்காகவும் அமைந்துவிடுகின்றது.நீங்கள் துஆக்கள் செய்யவில்லையென்றால் பரவாயில்லை. துஆக்கள் (ஜமாஅத்தான ஃபர்ழ்) தொழுகையின் கடமையான அங்கம் கிடையாது. நீங்கள் அத்தஹியாத் அமர்கின்றீர்கள். தரூத் ஓதியபிறகு துஆசெய்கின்றீர்கள்.

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...

### திருக்குர்ஆனிலிருந்து...


(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad